# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 04.04.2023

## தலைமைக் கழக செய்தி வெளியீடு

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட்டவரும், ஏழை எளியவர்களின் முன்னேற்றத்திற்காக தன் வாழ்வை அர்பணித்தவரும், பேரறிஞர் அண்ணாவின் அன்பைப்பெற்றவருமான கல்வித்தந்தை **P.K.மூக்கையாத்தேவர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா** இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, **கழக பொதுச்செயலாளர் திரு. டிடிவி தினகரன் அவர்களின் சார்பில்**, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, பசும்பொன் முத்துராலிங்கதேவர் கல்லூரியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் கழக தலைமை நிலைய செயலாளரும், மதுரை புறநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.இ.மகேந்திரன்** அவர்கள் தலைமையில் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தப்பட்டது.





இதனைத் தொடர்ந்து, மதுரை மாவட்டம், அரசடியில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு கழக இதயதெய்வம் அம்மா பேரவை செயலாளரும், கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினரும், கழக செய்தி தொடர்பாளருமான **திரு.K.டேவிட் அண்ணாதுரை,** கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.மன்ற செயலாளர் **இரயில்வே திரு.S.பரமநாதன்,** கழக மகளிர் அணி செயலாளரும், முன்னாள் அமைச்சருமான **திருமதி.வளர்மதி ஜெபராஜ்,** மதுரை மாநகர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.M.ஜெயபால்,** மதுரை மாநகர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.S.ராஜலிங்கம், கழக வழக்கறிஞர் பிரிவு இணைச்செயலாளர் திரு.M.அழகாத்தேவன், கழக பொறியாளர் அணி துணைச்செயலாளர் திரு.P.G.ராம்பிரசாத்** ஆகியோர் கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




இவ்விரு நிகழ்விலும், மதுரை மாநகர் வடக்கு, மதுரை மாநகர் தெற்கு, மதுரை புறநகர் வடக்கு மற்றும் மதுரை புறநகர் தெற்கு ஆகிய மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட / வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தொண்டர்கள் என திரளானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

**தலைமைக் கழகம்**

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**